# தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!



**நாள் : 02.10.2026 - (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | ஒன்றிய/நகர/பேரூர்க் கழகங்கள் | இடம் |
|---|---|---|
| காலை 10.30 | தாராபுரம் நகரம் | தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ' |
| மாலை 5.00 | தாராபுரம் நகரம் | உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம் |

**தேர்தல் பணிக்குழு**

**101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி**

### ஜெம் வீரமணி விவகாரத்தில் தி.மு.க.வுக்கு எந்தத் தொடர்பும் இல்லை!

# இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது!

## காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

வேலூர், செப்.28-

இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என காட்பாடியில் கழக பொதுச் செயலாளர் துரைமுரு கன் கூறினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகரில் தி.மு.க., பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

பா.ஜ.க.,வை எதிர்த்ததால் மு.க.ஸ்டாலின், பினராயி விஜயன், மம்தா ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர் என்று எஸ்.ஐ.ஆர் விவகாரம் தொடர்பாக கரப்பான் பூச்சி ஜனதா கட்சித் தலைவர் அபிஜித் குற்றச் சாட்டு வைத்திருக்கிறார்.

இந்த விவகாரம் தற்போது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. இதில் தலைமை தேர்தல் ஆணையரை மாற்ற வேண்டும். மம்தா பானர்ஜி, பினாயி விஜயன், மு.க.ஸ்டாலின் ஆகிய தலைவர்கள் எந்த ஊரிலும் தோற்பதற்கு வாய்ப்பே கிடையாது.

எங்களைப் போன்றவர்கள் எல்லாம் குறி வைத்து தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் தேர்தல் கமிஷனரை வீட்டுக்கு அனுப்புறதுதான் முறை.

எங்கள் ஆட்சியில் மின்சாரம் சரியாக உள்ளது என்றுதான் ஆளும்கட்சி அமைச்சர்கள் சொல்வார்கள். சாதாரண குடும்பங்களில் மின்சாரம் எவ்வளவு துண்டிக்கப்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

ஜெம் வீரமணி வழக்கில் தி.மு.க.,வை எப்படி குறை சொல்ல முடியும்? ஜெம் வீரமணிக்கு தி.மு.க., ஒன்றும் வக்காலத்து வாங்கவில்லையே.. யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். சட்டம் தன் கடமையை செய்திருக்கிறது. யாராயிருந்தாலும் தண்டிக்கபட வேண்டியவர்கள். ஜெம் வீரமணி விவகாரத்தில் தி.மு.க.,வுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று எல்லோரும் சொல்லிவிட்டோம்.

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி, தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும் என்று சொல்லியதை அடுத்து ராகுல் காந்தி அதையே முன்னெடுத்து இருக்கிறாரே என்று கேட்கிறீர்கள். கட்சிக்கு அப்பாற்பட்ட ஒன்று இது. இதை எல்லோரும் ஒன்று சேர்ந்து தான் செய்ய வேண்டும். கரப்பான் பூச்சி மட்டுமே செய்ய வேண்டும் என்று அல்ல. எல்லா பூச்சியும் சேர்ந்துதான் செய்யணும்.

எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் ஆதியிலேயே இது சரியில்லை என்று தி.மு.க., சொல்லிக் கொண்டுதான் இருக்கிறது. இதுகுறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் ஆயிரம் முறை பேசி இருக்கிறார். எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் குறைபாடு உண்டு.

இடைத்தேர்தலில் 2 தொகுதிகளிலும் தி.மு.க.,வின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி மூலனூர் கிழக்கு ஒன்றியம், வேளாண்பூண்டி ஊராட்சி, அரிக்காரன்பாளையம், சீத்தப்பட்டி பகுதியில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், சென்னிமலை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, இரா.சேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து ஈரோடு ஒருங்கிணைந்த வடக்கு மாவட்டம், பவானி தெற்கு ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட தூரம்பாடி, ஊராட்சி, பாகம் எண் 257 ல் மாவட்ட இலக்கிய அணி சார்பில் பவானி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பி.துரைராஜ் தலைமையில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எஸ்.ஏ.அன்பழகன், மாவட்ட கழக துணைச் செயலாளர் கீதா நடராஜன், ஒன்றிய துணைச் செயலாளர் என்.சத்தியமூர்த்தி, பவானி நகர கழக பொருளாளர் எம்.ராஜசேகர், நகர மாணவரணி துணை அமைப்பாளர் எம்.ரஞ்சித், தூரம்பாடி ஊராட்சி மாவட்டப் பிரதிநிதி மோகன்ராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.



"தாங்கள் விரும்பிய வேறு கல்லூரியில் இடம் கிடைத்து மாணவர்கள் சேர நினைத்தால், முதலில் சேர்ந்த கல்லூரிக்குச் செலுத்திய கல்விக் கட்டணமும், மாற்றுச் சான்றிதழும் (TC) காலதாமதமின்றி வழங்கப்பட வேண்டும்" எனக் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் பயனடைந்த திருச்சியைச் சேர்ந்த மாணவி ராஜேஸ்வரி நேற்று முன்தினம் (26.09.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தார். கோவில் திருமாளம் தட்சிணாமூர்த்தி அவர்கள் மற்றும் மாணவியின் பெற்றோர் உடன் உள்ளார்கள்.

### வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் எழுதிய

# "சாதனைச் சகோதரர்கள் நாவலர் - செழியன் 'நூல்'!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டார்!



வேலூர், செப்.28-

வி.ஐ.டி. பல்கலைக்கழகம் மற்றும் நாவலர் செழியன் அறக்கட்டளை இணைந்து நடத்திய நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் அவர்கள் எழுதிய "சாதனைச் சகோதரர்கள் நாவலர் - செழியன்" என்ற நூலை சிறப்பு அழைப்பாளராக கழகப் பொதுச்செயலாளர், துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இரா.சபாபதி மோகன்

வி.ஐ.டி. பல்கலைக்கழக துணைத் தலைவர் ஜி.வி.சங்கர்,

வேலூர் மாநகர மேயர் திருமதி. சுஜாதா,

கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா அவர்களை ஆதரித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் ராயப்பட்டினம் பகுதியில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர். புதுக்கோட்டை மாநகர துணை மேயரும் மாவட்ட பொருளாளருமான எம்.லியாகத் அலி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, ஒன்றியச் செயலாளர்கள் குளவாய்ப்பட்டி சி.சண்முகம், ஆர்.ஆர்,சாமிநாதன், புதுக்கோட்டை மாநகர அவைத்தலைவர் அ.ரெத்தினம், மாநகர துணைச் செயலாளர் மணிவேலன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் டாக்டர் கே.என்.அமானுல்லா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலன், சுந்தர்ராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன், ஆர்.ஆர்.விஜயபாஸ்கர், ரெங்கராஜ், ரமேஷ் பாண்டி, விஸ்வநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.

### ஜெம் வீரமணி வழக்கில்

# நீதிமன்ற உத்தரவை மீறி விஜய் பிரச்சாரம் செய்வதா?

## தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க. புகார்!

சென்னை, செப். 28 -

ஜெம் வீரமணி தொடர்பான வழக்கில் 3 மாதங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் த.வெ.க. அரசு என்ன செய்து கொண்டிருந்தது? என்று தி.மு.க. செய்தித் தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

நீதிமன்ற உத்தரவை மீறி ஜெம் வீரமணி தொடர்பான வழக்கில் தி.மு.க. மீது திட்டமிட்டு அவதூறு பரப்பப்படுவதாக குற்றம் சாட்டினார்.

உயர்நீதிமன்ற உத்தரவை மதிக்காமலும், தேர்தல் ஆணைய விதிகளை மீறியும் முதலமைச்சர் மதுராந்தகத்தில் விஜய் பேசியுள்ளதாகவும், சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் முதலமைச்சர் விஜய்க்கு எதிராக, தி.மு.க. சார்பில் தேர்தல் ஆணையத்தில் புகார் கடிதம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் கூறினார்.

தூயசக்தி என்று தம்மைத்தாமே தம்பட்டம் அடித்துக்கொள்ளும் த.வெ.க.வினர் இடைத் தேர்தலில் பணத்தை வாரி இறைத்து வருவதாகவும் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. விமர்சித்தார்.